## சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு

### சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் மொழிபெயர்ப்பாளர் சேவை தரம் II பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் – 2025 (நாடளாவிய ரீதியாக)

---

1.0 சபரகமுவ மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் 01.06.2020 ஆம் திகதியில் முதல் அங்கீகரிக்கப்பட்ட சபரகமுவ மாகாண மொழிபெயர்ப்பாளர் பதவி – கள/அலுவலக அதிகாரி 1 சேவை வகை (MN-6-2025) பத்விக்கான ஆட்சேர்ப்பு திட்டத்தின் விதிகளின் படி மற்றும் ஆளுநரின் செயலாளரின் கடித இலக்கம் GS/ES/6/11/1/1 மற்றும் 06.11.2025 திகதியுடைய கடிதத்தின் மூலம் வழக்கப்பட்ட ஒப்புதலின் மூலம் சபரகமுவ மாகாண உள்ளக கணக்காய்வு அதிகாரி III ஆம் தரத்தின் பதவிக்கு ஆட்சேர்ப்பு மொழிபெயர்ப்பாளர் தரம் II பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்காக நாடளாவிய ரீதியில் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| • மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) | 01 |
| • மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்) | 02 |

முக்கிய குறிப்பு:- நீங்கள் இந்தப் பதவிக்கு தகுதி பெற்றிருந்தால் சபரகமுவ மாகாணத்தில் குறைந்தபட்சம் 05 ஆண்டுகள் சேவை செய்வதற்கு இணங்க நாடளாவிய ரீதியில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தொடர்பில் பரிசீலிக்கப்படுவார்கள்.

2.0 சபரகமுவ அரச சேவை ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும் , மேலும் சபரகமுவ மாகாண அரச சேவையில் மொழிபெயர்ப்பாளர் தரம் II பதவிகளுக்கு நியமனம் செய்வதற்காகத் தேர்வு செய்யப்படும்.

3.0 சம்பள அளவுத்திட்டம் :- பொது நிர்வாக சுற்றறிக்கை எண் 10/2025 மற்றும் 25.03.2025 திகதியிடப்பட்ட மொழிபெயர்ப்பாளர் தரம் II சம்பளத் தொகுதி MN-6-2025 மற்றும் திரட்டிய சம்பள அளவுத் திட்டமானது ரூ.62,230 -10x1,190 -11x1,360 -15x1,670 - ரூ114,140/- ஆகும்.

4.0 பதவியின் கடமைகள்

i. சிங்களம் / தமிழ் மொழிபெயர்ப்பாளர் – சிங்களத்தில் பெறப்பட்ட கடிதங்களை தமிழிலும் , தமிழில் பெறப்பட்ட கடிதங்களை சிங்களத்திலும் மொழிபெயர்க்க முடிதல்

ii. சிங்களம் / ஆங்கிலம் மொழிபெயர்ப்பாளர் – சிங்களத்தில் பெறப்பட்ட கடிதங்களை ஆங்கிலத்திலும் , ஆங்கிலத்தில் பெறப்பட்ட கடிதங்களை சிங்களத்திலும் மொழிபெயர்க்க முடிதல்

5.0 தகைமைகள் :- சபரகமுவ மாகாண அரச சேவையில் மொழிபெயர்ப்பாளர் தரம் II பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு பின்வரும் தகைமைகள் பொருந்தும்.

5.1 கல்வித் தகைமைகள்

<u>5.1.1 கல்வித் தகைமைகள் : மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்)</u>

I. கா.பொ.த (சா.தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத கணிதம் சிங்களம்/தமிழ் மொழி அடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

II. இரண்டாம் மொழி (சிங்களம்/ தமிழ்) பாடங்களுக்கு கா.பொ.த (சா.தரம்) பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

III. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டமளிக்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தமிழ் மொழியினை ஒரு பாடமாகக் கொண்டதான பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

IV. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டமளிக்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் முதுகலை பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

<u>5.1.2 கல்வித் தகைமைகள் : மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்)</u>

I. கா.பொ.த (சா.தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத கணிதம் சிங்களம்/தமிழ் மொழி , ஆங்கிலம் அடங்கலாக 05 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

II. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டமளிக்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழியினை ஒரு பாடமாகக் கொண்டதான பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

III. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டமளிக்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் முதுகலை பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**5.2 தொழில் தகைமை**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து 06 மாத கால கணனி / தொழில்நுட்ப பாடநெறி (NVQ Level 03)

**5.3 உடற் தகைமை**

சகல விண்ணப்பதாரிகளும் சபரகமுவ மாகாணத்திற்குள் உள்ள எந்தவொரு பகுதியிலும் பணியாற்றவும் பதவியின் கடமைகளைச் செய்யவும் போதுமான உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

**5.4 பிற தகுதிகள்**

I. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரி சிறந்த குணநலன் கொண்டவராகவும் நல்ல ஆரோக்கியத்துடனும் இருக்க வேண்டும்.

III. விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று 21 வயதிற்கு குறையாதவராகவும் , 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு : சகல விண்ணப்பதாரிகளும் உரிய சகல தகமைகளையும் **15.01.2026** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

6.0 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படும் பகுதிகள் மற்றும் புள்ளிகள்

| புள்ளிகள் வழங்குவதற்கான பிரதான பகுதிகள் | புள்ளி பெறுமதி | அதிகபட்ச புள்ளிகள் | தெரிவு செய்வதில் கருத்தில் கொள்ள வேண்டிய குறைந்தபட்ச மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| பகுதி 1 | 50 | 50 | |
| 1. மொழித் தேர்ச்சி | | (30) | 20 |
| 1.1 விண்ணப்பிக்கும் பதவிக்கு அமைய மொழி தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டமளிக்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் வழங்கப்படும் பதவிக்குரிய மொழிபெயர்ப்பு டிப்ளோமா அல்லது அதற்கு மேற்பட்ட மொழிபெயர்ப்பு தகைமையைப் பெற்றிருத்தல். | 15 | | |
| 1.2 விண்ணப்பிக்கும் பதவிக்கு (சிங்களம் / தமிழ்) (சிங்களம் /ஆங்கிலம்) அடிப்படை தகைமைகளுக்காக முன்வைக்கப்படும் பட்டத்திற்கு அமைய மொழி தவிர பதவிக்குரிய ஏனைய மொழி தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டமளிக்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் வழங்கப்படும் டிப்ளோமா அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையைப் பெற்றிருத்தல். | 15 | | |
| 2. கணனி தேர்ச்சி<br>அடிப்படை தகைமைகளுக்காக கணனித் தேர்ச்சிக்கு மேல் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து ஒரு வருட அல்லது அதற்கு மேற்பட்ட கணனி/ தொழில்நுட்ப பாடநெறி தகைமையைப் பெற்றிருத்தல். | 10 | (10) | |
| 3. நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறன்கள் | 10 | (10) | |
| மொத்த புள்ளிகள் | 50 | | |
| பகுதி 2 | 50 | 50 | |
| 1.கீழே குறிப்பிடப்பட்டுள்ள படி பொது முக்கியதுவம் வாய்ந்த உரை , அதிகாரப்பூர்வ ஆவணம் அல்லது அறிக்கையில் இருந்து ஒரு பகுதியையும் , செய்தித்தாள் கட்டுரை அல்லது அறிக்கையில் இருந்து ஒரு பகுதியையும் மொழிபெயர்த்தல் | | | |
| **01.** சிங்களம் / ஆங்கிலம் மொழிபெயர்ப்பு பதவிக்காக<br>**1.1** சிங்களத்தில் இருந்து ஆங்கிலத்திற்கு<br>**1.2** ஆங்கிலத்தில் இருந்து சிங்களத்திற்கு | (50)<br>25<br>25 | (50) | 20 |
| **02.** சிங்களம் / தமிழ் மொழிபெயர்ப்பு பதவிக்காக<br>2.1 சிங்களத்தில் இருந்து தமிழ் மொழிக்கு<br>2.2 தமிழில் இருந்து சிங்கள மொழிக்கு | (50)<br>25<br>25 | (50) | |
| முழு மொத்தம் | 50 | | |

குறிப்பு : இந்த கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை 02 பகுதிகளைக் கொண்டுள்ளதுடன் ,தேர்ச்சி பெற முதல் பகுதியில் குறைந்தபட்சம் 20 மதிப்பெண்களும் , இரண்டாம் பகுதியில் 20 மதிப்பெண்களும் பெற வேண்டும் . பெறவேண்டிய மொத்த புள்ளிகள் குறைந்தபட்சம் 40 ஆகும்.

7.0 பரீட்சைக் கட்டணங்கள் :

I. பரீட்சைக் கட்டணம் ரூ.1200/- ஆகும். சபரகமுவ மாகாண சபையின் எந்தவொரு அமைச்சு அலுவலகத்திற்கு / திணைக்களத்திற்கு (உள்ளூராட்சி நிறுவனம் தவிர) அல்லது சபரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் குறித்த கட்டத்தினுள் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். **<u>இப் பரீட்சைக் கட்டணத்தை சபரகமுவ மாகாண சபையின் 20.03.02.99 என்ற வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்க வேண்டும்.</u>** செலுத்தப்படுகின்ற பரீட்சைக் கட்டணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.அத்துடன் காசுக் கட்டளை மற்றும் முத்திரைகள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.பற்றுச் சீட்டின் நகல் பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்.

II. நாடளாவிய ரீதியில் விண்ணப்பிக்கும் பிற மாகாண விண்ணப்பதாரிகள் இரத்தினபுரி பிரதான தபால் நிலையத்தில் இருந்து பணத்தை மாற்றக்கூடிய மாவட்டத்தில் உள்ள எந்த தபால் நிலையத்தில் இருந்து சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு செலுத்த வேண்டிய **காசுக் கட்டளை (Money Oder)** அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தில் பொருத்தமான கட்டத்தில் ஒட்டி அதன் இலக்கத்தை குறிப்பிட வேண்டும்.காசுக் கட்டளையை செலுத்தி அதன் நகல் பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்.

8.0 விண்ணப்பப்படிவம் :

A-4 அளவிலான கடதாசிகளை உபயோகித்து,

(அ). தொடரிலக்கம் 01 முதல் 04 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும்,

(ஆ). இல 05 முதல் 06 வரை இரண்டாம் பக்கத்திலும் அடங்குமாறு இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலத்தினைக் கொண்டு தமது கையெழுத்தினாலே தெளிவாக நிரப்புதல் வேண்டும்.

(இ).விண்ணப்பப்படிவங்களை தயாரிக்கும் போது சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரினை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் , தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்திராத குறித்த திகதிக்கு முன்னர் பரீட்சை கட்டணங்களைச் செலுத்திடாத மற்றும் சரியாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய வகையில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் நட்டத்திற்குரிய பொறுப்பினை விண்ணப்பதாரிகளே ஏற்றல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுடையதாக அமையும்.பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தினை ஒத்துள்ளதா என்பது தொடர்பாக விண்ணப்பதாரி கவனம் செலுத்துதல் வேண்டும்.அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படலாம்.

8.1 இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகத்தின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உரிய திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு சபரகமுவ மாகாண அரச சேவை

ஆணைக்குழுவினால் இடமளிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் இந்தப் பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக் கொள்வதாக கருதப்படமாட்டாது.

8.2 விண்ணப்பதாரியின் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை அனுமதிப் பத்திரத்திலும் கையொப்பம் சான்றளிக்கப்பட வேண்டும். எந்தவொரு நிறுவனத்திலிருந்தும் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் அந்த நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியினால் தனது கையொப்பத்தை சான்றளிக்கலாம். அவ்வாறல்லாத விண்ணப்பதாரர் அரசாங்க பாடசாலையின் அதிபர் / சமாதான நீதவான் /சத்தியப்பிரமாண ஆணையாளர் / பிரசித்த நொதாரிசு / முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர் / பொலிஸ் சேவை அலுவலர் / அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர பதவிநிலை அதிகாரி அல்லது பௌத்த விகாரையின் தலைமை விகாராதிபதி அல்லது தலைமை மதகுரு அவர்கள் அல்லது பிற மத வழிபாட்டுத் தலப் பொறுப்பான நபர் அல்லது மத சமூகத்தில் குறிப்பிடத்தக்க பதவியை வகிக்கும் நபர் ஆகியோரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.

8.3 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் 15.01.2026 திகதி அல்லது அதற்கு முன்னர் **"செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு, சபரகமுவ மாகாண சபை, சபரகமுவ மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, புதிய நகரம் , இரத்தினபுரி** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

8.4 விண்ணப்பப்படிவத்தினைக் கொண்டிருக்கின்ற தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் மொழிபெயர்ப்பாளர் சேவை தரம் II பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் – 2025** மற்றும் நிரந்தர வதிவு மாவட்டத்தினையும் குறிப்பிட வேண்டும்.

9.0 விண்ணப்பதாரிகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வருகின்ற ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

- I) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை
- II) செல்லுபடியாகின்ற கடவுச் சீட்டு
- III) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

10.0 தவறான தகவல்களைச் சமர்ப்பித்தல்

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரால் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல் பிழையானது அல்லது தவறானதென்று ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டுபடிக்கப்பட்டால் , அவரது விண்ணப்பதாரர் நிலை இரத்துச் செய்யப்படும்.ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் அத்தகைய பிழையான அல்லது தவறான தகவல் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் உரிய சட்ட நடைமுறைகளுக்கு அமைவாக அரச சேவையிலிருந்து அவர் நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11.0 இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் கருத்து இருந்தால் , அது தொடர்பாக சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானது.சகல விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது பரீட்சை சட்ட திட்டங்களுக்கு அமைய இணைக்கப்பட்டுள்ளீர்கள்.இங்குள்ள **சிங்கள மற்றும் தமிழ் அறிவிப்புகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால் சிங்கள மொழிமூல அறிவிப்பிற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.**

2025.12.10 / 11
சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு
சபரகமுவ மாகாண கட்டிடத் தொகுதி
புதிய நகரம் இரத்தினபுரி

டபிள்யு.ஆர்.தினீஷா எஸ்.ரத்னாயக
செயலாளர்
சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு
சபரகமுவ மாகாணம்

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் மொழிபெயர்ப்பாளர் சேவை தரம் II பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் ) 2025 –நாடளாவிய ரீதியாக)**

**Open Competitive Examination for the Recruitment to the post of Translators - Grade II in the Sabaragamuwa Provincial Public Service - 2025**

---

புரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் : [ ]

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

சிங்களம் – 2

தமிழ் – 3 [ ]

ஆங்கிலம் – 4

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

1.0 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக எழுதி முதலெழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உ+ம் PERERA A.B.C

........................................................................................................................

1.2 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ....................................................

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) ....................................................

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் [ | | | | | | | | | ]

1.5 தொலைபேசி இலக்கம் [ | | | | | | | | | ]

1.6 விண்ணப்பிக்கும் பதவி ....................................................

(மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) அல்லது (சிங்களம் / ஆங்கிலம் ) தெளிவாக குறிப்பிடவும்)

2.0 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ....................................................

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்) ....................................................

2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ....................................................

3.0 3.1 விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டம் : ....................................................

3.2 பிரதேச செயலாளர் பிரிவு : ........................................

3.3 வதியும் கால எல்லை : ........................................

3.4 கிராம செயலாளர் பிரிவு : ........................................

4.0 4.1 பால் பெண் 1 / ஆண் 0 [ ] உரிய இலக்கத்தினை எழுதுக

4.2 பிறந்த திகதி :

வருடங்கள் [ | | | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

4.3 2026.01.15 ஆம் திகதிக்கு வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

5.0 கல்வித் தகைமை

5.1 கா.பொ.த (சா.தரம்) பரீட்சை பெறுபேற்று விபரம் (பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பரீட்சை பெறுபேற்று நகல் இணைக்கப்பட வேண்டும்)

வருடம் : ..............................                                        சுட்டெண் : ........................

| இல | பாடம் | பெறுபேறு | இல | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

5.2 பெற்றுக்கொண்ட பட்டம் தொடர்பான விபரம்

I. பெற்றுக் கொண்ட பட்டம் மற்றும் பாடங்கள்.................................................
..........................................................................................................
..........................................................................................................

II. அச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி ..........................................................

III. பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட பல்கலைக்கழகம் / நிறுவனம் ...........................
..........................................................................................................

(பட்டச் சான்றிதழின் பிரதியினை இணைக்க வேண்டும்)

5.3 பெற்றுக்கொண்ட முதுகலை பட்டம் தொடர்பான விபரம்

I. பெற்றுக் கொண்ட முதுகலை பட்டம் மற்றும் பாடங்கள்
..........................................................................................................
..........................................................................................

II. அச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி ..........................................................

III. முதுகலை பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட பல்கலைக்கழகம் / நிறுவனம்
..........................................................................................................
............................

(பட்டச் சான்றிதழின் பிரதியினை இணைக்க வேண்டும்)

6.0 நீங்கள் எப்பொழுதாவது எத்தகையதுமான ஒரு குற்றச்சாட்டிற்காக நீதிமன்றம் ஒன்றால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? (உரிய கூட்டினுள் √ அடையாளமிடவும் )

ஆம் ☐          இல்லை ☐

7.0 ஏற்கனவே அரச சேவையில் உள்ளவராயின் ,

7.1 திணைக்களம் / நிறுவனத்தின் பெயர் : ........................................................................

7.2 தற்போது வகிக்கும் பதவி : ..........................................................................................

7.3 சேவைக் காலம் : .........................................................................................................

7.4 நிரந்தர ஓய்வூதியம் உரித்துடைய அல்லது தற்காலிகம் : ..............................................

8.0 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு தொடர்பான விபரங்கள்

I. பரீட்சை கட்டணம் செலுத்திய அலுவலகம் : ......................................

II. பற்றுச் சீட்டின் இலக்கமும் திகதயும் : ..................................................

III. செலுத்திய பணம் : ..........................................................................

| பற்றுச்சீட்டை பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டவும்.<br>( பற்றுச் சீட்டின் நிழற்பட பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக் கொள்ளவும் ) |
|---|

9.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் வழங்கியுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டியவரையில் உண்மையானவை எனவும் நான் இத்தால் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன்.இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்திசெய்யாதிருந்தால் மற்றும் / அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாக பூர்த்தி செய்திருத்தல் ஆகியவற்றின் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகின்றேன்.மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் தரப்பட்ட தகவல்கள் பொய்யானவை எனத் தெரிய வந்தால் நியமனத்திற்கு முன்னரான தகமை நீக்கத்திற்கும் , நியமனத்திற்கு பின்னர் தெரியவந்தால் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னர் மாற்றம் செய்ய மாட்டேன்.

(ஈ) மேலும் இப் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(உ). இந்தப் பதவிக்கு நான் தகுதி பெற்றால் , சபரகமுவ மாகாணத்தில் குறைந்தபட்சம் 05 ஆண்டுகள் பணியாற்ற ஒப்புக்கொள்கிறேன்.

.............................. ........................................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

10.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிபடுத்தல்

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி./செல்வி./ .................................... என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ,அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் .................................... ஆந் திகதி வைத்தார் என்றும் , உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிபடுத்துகின்றேன்.

.............................. ..............................................

திகதி உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர் பெயர் : ...................

பதவி : .......................................

முகவரி : ........................................

(பதவி முத்திரை மூலம் உறுதிபடுத்தப்பட வேண்டும்)

11.0 அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்போது பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள உறுதிபடுத்தலையும் நிறுவனத் தலைவர் , திணைக்கள தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(அ) இந்த திணைக்களத்தில் ..................... திகதி தொடக்கம் ......................... பதவியில் சேவைபுரியும் திரு./திருமதி./செல்வி./ .......................................... விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு கிடைக்க வேண்டிய சம்பள ஏற்றங்கள் முழுவதையும் உழைத்துள்ளார் என்றும் , எதுவித ஒழுக்காற்று தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும், விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியான மற்றும் உண்மையானவை என்றும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு இவர் தெரிவுசெய்யப்படுவாராயின் , விண்ணப்பதாரி தற்போது வகிக்கும் சேவையில் இருந்து விடுவிக்க முடியும் / முடியாது எனவும் தெரிவிக்கின்றேன்.

பெயர் ..........................................

பதவிப் பெயர் ..............................

திகதி ............................................

( திணைக்களம் /நிறுவனம் )

..........................................

திணைக்களத் தலைவர் அல்லது
அதிகாரம் அளிக்கப்பட்ட
உத்தியோகத்தர் கையொப்பம்